மதுரை சீடு குழந்தைகள் பேரவை வழங்கும் தனிச்சுற்று இதழ்

MADURAI SEED

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

உலகு 4 | பணிமடல் 15 | ஏப்ரல் - மே 2010 | நன்கொடை ரூ. 2

**இந்திய அளவில் பள்ளிப்படிப்பை முடிக்கும்**
**22 கோடி பேரில் 12.4 விழுக்காடு (சுமார்2 3/4 கோடி)**
**மாணவர்கள் தான் கல்லூரி வாசலைத் தொடுகின்றனர்.**
**உயர்கல்விக்கு வருவோர் எண்ணிக்கை**
**மிகவும் குறைவாக இருக்க காரணம்**
**உயர்கல்வி தனியார்மயமாகி போனதினால்**
**ஏற்பட்டுள்ள மிக அதிகமான கல்விக் கட்டணம் தான்**



M. முத்துப்பாண்டி, XII



K. சதீஸ்குமார், X



S. முத்துகணேஷ், IX

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு வழிகாட்டலுடன் மதுரை சீடு குழந்தைகள் பேரவை குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது







தினமணி மதுரை 11

திங்கள்கிழமை, 17 மே, 2010



# குழந்தைகளுக்கான கோடை முகாம் நிறைவு விழா

மதுரை, மே 16: மதுரை சீடு தொண்டு நிறுவனம் சார்பில் நலிவுற்ற குழந்தைகளுக்கான கோடைப் பயிற்சி முகாம் நிறைவு விழா கரும்பாலையில் நடைப்பெற்றது.

கடந்த 10 தினங்கள் நடந்த பயிற்சி முகாமில் குழந்தைகளுக்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன. போதை விழிப்புணர்வு, சூழலியல், ஊடகம், சுகாதாரம், மனிதநேயம் உள்ளிட்ட தலைப்புகளில் கலந்துரையாடல்கள் மற்றும் திரையிடல்கள் ஆகியவை நடைபெற்றன.

மேலும் கழிவுகளில் இருந்து கலைப்பொருட்கள் தயாரித்தல், அடுப்பில்லா சமையல், மேஜிக், கைரேகை ஓவியம், நாடகம், சத்துணவு தயாரிப்பு, சினிமா திறனாய்வு, விளையாட்டுப் பயிற்சிகள் உள்ளிட்டவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டன.

பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு மாநகராட்சி உறுப்பினர் கருப்பையா சான்றிதழ்களை வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை முத்துக்குமார் மற்றும் நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி ஏற்பாடு செய்திருந்தனர்.

















## வாசக நெஞ்சங்களே

புதுயுகம் இதழின் வாழ்த்துக்கள்! படைப்புகள் தரும் மகிழ்ச்சியை கொண்டாடுபவர்கள் நாம். அதன்படி இம்முறையும் நம் இதழ் 15வது முறையாக தங்கள் கைகளில் வந்து சேர்ந்துள்ளது. புதுயுகம் கையெழுத்து பிரதிகளாக பல்வேறு பெயர்களில் 1999 - 2006 வரை வெளிவந்தன. 2007 மார்ச் முதல் அச்சிடப்பட்ட புதுயுகம் இதழ்களாக மதுரை சீடு-ஐ தாண்டியும், பிற நிறுவன குழந்தைகள், பள்ளி குழந்தைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஆதரவாளர்கள் என அனைவரையும் சென்றடையும் விதமாக வெளிவந்தன. வெற்றிகரமாக, புதுயுகம் நான்காமாண்டை தொடங்கி உள்ளது. இதன் வெற்றிக்கு காரணம் மதுரை சீடு தொண்டர்களின் அயரா உழைப்பும், தொடர்ந்து உதவி வரும் ஆஷா நிறுவனமும் தான். புதுயுகம் குறைநிறைகளை சுட்டி காட்டி எங்களை வளர்க்கும் ஆஷா Dr. மெல்லியல் அவர்களையும், தமிழறிஞர் Dr.அண்ணாமலை அவர்களையும் நினைத்து பார்க்கும் தருணம் இது. அவர்களுக்கு நன்றிகள். சென்னை ஆஷா குழுவினரான திருமிகு. பாஸ்கர், திருமதி.லெட்சுமி, திருமிகு.ராஜாராம் மற்றும் தேசிய ஆஷா அமைப்புக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். எங்களின் ஆதார சுருதியாக விளங்கும் FMS அமைப்பு மற்றும் இவலின், லௌரா, ஜான் ஆகியோருக்கும், வாசக நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.தொடர்ந்து குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்க்கும் பணிகளை மதுரை சீடு இன் புதுயுகம் இதழ் செவ்வனே தொடரும். புதுயுகம் இதழை படியுங்கள். இதழ் படைப்பாக்கத்தில் பங்கு பெறுங்கள். பயன் அடையுங்கள். அடுத்த இதழில் சந்திப்போம்.

C.அருண்குமார்
தொண்டர் பொறுப்பாளர்
A.S.கார்த்திக்பாரதி
நிர்வாக அறங்காவலர்

இவண்
V.திவ்யபாரதி. A.ஷர்மிளா
D.விக்னேஷ்வரன். A.ராமகிருஷ்ணன்
ஆசிரியர் குழு புதுயுகம்.

## உள்ளே...


- வரையலாம் வாங்க
- கேள்விகளும், பதில்களும்
- கைவண்ணங்கள்
- பால் பருகுவோம்
- ஆபியம்
- துணுக்குகள்
- பேனாக்களின் சேதி
- புகழின் சுவர்

# இயற்கை பானம் பருகுவோம்!

தாகம் தீர்க்கும் இளநீரு
தவிக்கும் வாய்க்கு நீர்மோரு
பருகிப் பாரு பதநீரு
பறந்து போகும் வியர்க்குரு!

வெயில் தணிக்க வெள்ளரி
வெளுத்து வாங்கு தினசரி
நீர்ப்பழம் தர்பூசணி
நிதம் ருசிப்போம் நாமினி!

கோடை வெம்மை தாங்கிட
இயற்கை நோக்கி நீ நட
புட்டிப் பானம் தவிர்த்திடு
உடல் நலத்தைக் காத்திடு!

செழியரசு



# ராஜா – சரோஜா



காலைப் பிடிக்கும் கை
என்ன கை ராஜா?
காலைப் பிடிக்கும் கை
சலங்கை சரோஜா!

கழுத்தைப் பிடிக்கும் கை
என்ன கை ராஜா?
கழுத்தைப் பிடிக்கும் கை
அட்டிகை சரோஜா!

தரையில் நடக்கும் கை
என்ன கை ராஜா?
தரையில் நடக்கும் கை
பாதுகை சரோஜா?

வானில் மினுக்கும் கை
என்ன கை ராஜா?
வானில் மினுக்கும் கை
தாரகை சரோஜா!

சித்திரம் தீட்டும் கை
என்ன கை ராஜா?
சித்திரம் தீட்டும் கை
தூரிகை சரோஜா!

சிகிச்சையளிக்கும் கை
என்ன கை ராஜா?
சிகிச்சை அளிக்கும் கை
மூலிகை சரோஜா!

ராஜாவை கேலி செய்யும் கை
என்ன கை சரோஜா!
ராஜாவை கேலி செய்யும் கை
நீயே சொல் ராஜா!


ராஜாவை கேலி செய்யும் கை
சொல்கிறேன் சரோஜா..
ராஜாவை கேலி செய்யும் கை
தங்கை சரோஜா!

லெமன்


நன்றி சிறுவர்மணி

# வரையலாம் வாங்க !


தம்பி, தங்கைகளே..! கீழே உள்ள மான் படத்தை படிப்படியாக வரைந்து பாருங்கள். வரைவது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும். உங்கள் ஓவியத் திறமையும் வளரும்.



## கைவண்ணம் – I.




செ.வைஷ்ணவி
III




K.ஹேமலதா
III




S.குருசங்கர்
V B



M.ஜெயபாண்டி
IV



R.பூமாதேவி
IV



K.மாரிமுத்து
IV



G.மார்ட்டின்ஜினோ
II



செ.அர்ஜுன்
III



வீரமணி
IV

# சில கேள்விகளும் - பதில்களும்

- **கேள்வி : நீ விரும்பும் பள்ளி எப்படி இருக்கணும்?**

பதில்: **மு.மணிகண்டன்** VII

அடிக்காத ஆசிரியர்கள், ஒழுக்கம் பேணும் பிள்ளைகள் இருக்கணும். மின்சாரவசதி, விளையாட்டு மைதானம், நூலகம் இருக்கணும். பிள்ளைகள் கெட்ட வார்த்தைகள் பேசக்கூடாது. எல்லோரும் வரிசையாக போகணும். வரிசையா வரணும். கம்ப்யூட்டர் சொல்லி தரணும். மாதம் ஒரு சுற்றுலா அழைத்துட்டு போகணும். அல்லது வருடம் ஒரு முறையாவது சுற்றுலா கூட்டிட்டு போகணும். நான் விரும்புற பள்ளியில் பிள்ளைகளுக்கு நிறைய அறைகள் வேணும். நிறையபேர் படிக்கணும். ஆசிரியர்கள் அழகாக இருக்கவேண்டும். நன்றாக பழக வேண்டும். நிறைய மரங்கள் வேண்டும். மேற்கண்டதையெல்லாம் விட நல்ல கக்கூஸ் தண்ணீர் வசதியுடன் வேண்டும். அதை ஒழுங்காக பாரமரிக்கணும் என் பள்ளியை அனைவரும் பெருமையாக பேச வேண்டும்.

- **கேள்வி: உனக்கு எவ்வளவு தினமும் செலவுக்கு கிடைக்கிறது. எவ்வளவு வேணும்?**

பதில்: **A.ஜோயல்** VI

தினமும் காலை, மாலை சேர்த்து 2ரூபாய். கிடைக்கும் 1ரூபாய்க்கு மிட்டாய் வாங்குவேன். 1ரூபாயை உண்டியலில் போடுவேன். இப்ப 2ரூபாய். போதும். பெரியவன் ஆனா 10ரூபாய் தேவை (ஜோயல் தயவுசெய்து உறுப்பினர் கட்டணமாவது கட்டுப்பா)

- **கேள்வி: உனக்கு பிடித்த பாடம்**

பதில்: **V.ஸ்ரீநாத்** VII

எனக்கு பிடிச்ச பாடம் இங்கிலிஷ் ஜெயலெட்சுமி டீச்சர் நல்லா சொல்லி தருவாங்க துணை பாட பகுதியில் உள்ள கருத்துக்கள் பிடிக்கும். (அப்படியா மாசமாசம் மறக்காம மார்க் பாப்போமே)

- **கேள்வி: உனக்கு வந்த கனவு**

பதில்: **விக்னேஷ்வரன்** VIII

நானும் என் நண்பன் விக்கியும் பாழடைந்த வீட்டிற்குள் போனோம். வீட்டுக்குள்ள ஒருவன் எங்களை அழைத்தான். நாங்களும் அவன் பின்னே போனோம். என்ன ஏது எங்கே என்று கேட்காமல் போயிட்டே இருந்தோம். அங்க பெரிய பள்ளதாக்கு பயமாவும், திகிலாவும் தெரிஞ்சுது. அதையும் தாண்டி போனா ஒரு கோட்டை. பயந்துகிட்டே மேல போனா கோட்டைக்குள்ள ஒரே சிரிப்பு சத்தம். மயங்கி பயந்து விழுந்தோம். எழுந்து பார்த்தா கனவு (என்ன கொடுமை சார்)

- **கேள்வி: குழந்தை தொழிலாளர்களை பற்றி?**

பதில்: **P.யோகேஸ்வரி** VI

நம் நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் தொழிலாளர் ஆகிவிட்டால் நம்நாடு முதலிடம் வகிக்காது. கல்வியிலும் முன்னேறினால்தான் முதலிடம் வகிக்கும். மக்கள் தொகையில் முன்னேற்றம் போதாது. படிப்பறிவிலும், இந்தியா முன்னேற வேண்டும்.

- **கேள்வி: பத்து வருடம் கழித்து எப்படி இருப்பாய்?**

பதில்: **A.ராமகிருஷ்ணன்** VII


பட்ட படிப்பு முடித்திருப்பேன். பெரிய நிறுவனத்திற்கு வேலைக்கு போவேன். உயரமா, அழகா இருப்பேன். நடை, உடை, பாவனை ஸ்டைல்லா இருக்கும். நிறுவனத்தில் மேனஜர் ஆனாலும் ஆயிருப்பேன். எனக்கு கீழே 100 பேர் வேலை பார்ப்பாங்க. ஆனா மீசை முளைச்சுருக்குமானு தெரியலை (சூப்பர் கவலைடா)

நான் வசதியா இருக்கிறதால நிறைய பேருக்கு உதவி செய்வேன். கல்யாண ஏற்பாடு நடந்திருக்கும் (டே ஓவருடா). இன்னிக்கி அம்மாகிட்ட 1ரூபாய் வாடகை சைக்கிளுக்கு கெஞ்சுற நான் 10 வருசம் கழித்து 1லட்ச ரூபாய் பைக்குல அம்மாவை கூட்டிட்டு போவேன். இதுக்கு மேல எதுவும் கேட்காதீங்க. நான் பிசியாக இருக்கிறேன். 10வருடத்திற்கு பிறகு என்னவாக போறேனோ அதுக்காக வேலை பார்த்துகிட்டு இருக்கேன்.

# கைவண்ணம் – 2



R.வினோதினி
VIII A




S.ராம்குமார்
V B




M.விஜயராணி
VI A



B.கௌசல்யா
VI A




K.நாகேஸ்வரி
V B



வி.ஸ்ரீநாத்
VII B



ச.மணிகண்டன்
VII A



K.கார்த்திக்
VII A



மணிகண்டன்
VIII B

# கவிஞர் சுரேஷ்சிங்



முன்னொரு காலத்தில் சுரேஷ் சிங் என்ற சிறுவன் இருந்தான். இவனுக்கு கற்று கொள்ளும் மற்றும் சிந்திக்கும் திறனும் அதிகமாக இருந்தது-இவனுக்கு தீப்சிங் என்ற அண்ணனும் இருந்தான். அவன் கவிதை எழுதுவதில் வல்லவன். அவன் பல கவிதைகள் எழுதி பாரட்டுகளையும், விருதுகளையும், வாங்கியுள்ளான். ஒரு நாள் மலையில் தீப்சிங் கவிதை எழுத வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்தான். அவனருகிலேயே தம்பி சுரேஷ்சிங்கும். உட்கர்ந்தான். தம்பி அண்ணன் எழுதும் கவிதைகளைப் பார்த்து கொண்டிருந்தான். மறு நாள் காலையில் சுரேஷ்சிங் ஒரு ஆலமரத்து நிழலில் உட்கார்ந்து கவிதை எழுத ஆரம்பித்தான். அண்ணன் தீப்சிங் தம்பியை காணமென்று ஊரில் எல்லா இடத்திலும் தேடுகிறான். கடைசியில் ஆலமரத்திற்கு சென்று தம்பியை பார்த்தான். தம்பி கையில் இருந்த பேப்பரை வாங்கி படித்தான். அவன் மனசுக்குள் சந்தோசத்திற்கு அளவே இல்லை. அந்த கவிதையைப் பார்த்து மேலும் நிறைய கவிதைகள் எழுத தம்பியை தூண்டுகிறான். அவன் தம்பி எழுதிய எல்லா கவிதை காகிதங்களை அண்ணன் தீப்சிங் சேகரித்து வைக்கிறான். ஒரு நாள் இருவரும் ஜாலியாக குளிக்க கிணற்றுக்கு போகிறார்கள். இருவருக்கும் இடையில் தண்ணீருக்குள் மூழ்கும் போட்டி ஏற்படுகிறது. தீப்சிங் மூச்சுத்திணறி வெளியே வந்தான். வெகு நேராமாகியும் சுரேஷ்சிங்கை காணவிலலை. சுரேஷ்சிங் இறந்து போய்விட்டான். மறுநாள் அவன் உடல் வெளியே மிதக்கிறது. அண்ணன் தம்பிக்கு செய்ய வேண்டிய இறுதி சடங்கை முடிக்கிறான். தன் தம்பி எழுதிய கவிதை காகிதங்களையெல்லாம் எடுத்து ஒரு புத்தகமாக வடிவமாக்குகின்றான். அந்த புத்தகத்திற்கு சாம்பலினுடைய காகிதங்கள் என்று பெயர் வைக்கிறான். இந்த கவிதை புத்தகம். பல விருதுகளையும். பரிசுகளையும் வாங்குகிறது. இன்னும் கவிதைகளின் மூலம் இறந்தும் வாழ்கிறான் சுரேஷ்சிங் என்ற கவிஞன்.

A.ராமச்சந்திரன் IX

# என் ஹீரோ



*எனக்கு பிடிச்ச ஹீரோ என் அப்பாதான் என் அம்மா என்னைத் திட்டினால் அம்மாவை அப்பா திட்டுவார் . செம ஜாலியா இருக்கும். பின்னாடி அம்மா கிட்ட Sorry கேப்பேன் (செம சூப்பு ஷர்மி) என் அப்பாவிற்கு நான் செல்லம். அப்பா கோபமாக இருக்கும் போது அவரிடம் யாரும் பேசக்கூடாது. ஒரு முறை சூழல் தெரியமால் வழக்கம் போல் பேசியபோது திட்டி விட்டார். என்னால் தாங்க முடியவில்லை. அப்பா கோபப்படும் போதெல்லாம் நானும் எங்காவது சென்று விடுவேன். அப்பா என்னை சமாதானம் செய்து அழைத்து வருவார். பிறிதொரு நாளில் இது மாதிரி பெரியம்மா வீட்டில் கோபத்தை மறந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பாவுக்கு இது தொல்லையாய் போயிற்று. உடனே வீட்டில் ஒரு புது டி.வி வாங்கி வைத்து விட்டார். முன்பு போல அவர் கோபப்படுவது இல்லை. நானும் வெளியில் செல்வது இல்லை. அப்பாவிடம் இன்னொரு கெட்ட பழக்கம். மூக்குப்பொடி போடுவது. அதை எப்படி நிறுத்துவது? கண்டிப்பாக ஒரு நாளில் அப்பாவின் இப்பழக்கத்தை நிறுத்திவிடுவேன்.*

*A. ஷர்மிளா IX*

## எனது ஆசிரியர்கள்



நான் மா.மணிபாண்டி. இப்போது செங்குந்தர் பள்ளியில் படிக்கிறேன். என்னோட இரண்டாம் வகுப்பு ஆசிரியர் சித்ரா. இவங்க போர் அடிப்பாங்க (அடப்பாவி 2ஆம் வகுப்புல போர் அடிக்குதுன்னு சொல்லியிருக்கானே). மூன்றாம் வகுப்பு ஆசிரியர்கள் பாண்டி முத்து மற்றும் சுமதி. சுமதி டீச்சர் வகுப்புல நான் 5வது ரேங்க் எடுத்தேன். அதனால அவங்களை பிடிக்கும். ஒரு முறை நான் சாலை விபத்தில் காயம் அடைந்தேன். இதை கேட்டு அதிர்ச்சியுற்ற பாண்டி முத்து டீச்சர் வாட்ச்மேன் மணி தாத்தாவை அனுப்பி என்னை பற்றி உடல் நலம் விசாரித்து வருமாறு கூறியுள்ளார். இந்த அன்பு அவரை மறக்க வைக்கவில்லை. 18.12.2009 ஆம் அன்று என் பிறந்த நாளுக்கு வாழ்த்து வாங்க பாண்டி முத்து ஆசிரியரிடம் சென்றேன்.

அவர் நீ மூணாம் வகுப்பு படிக்கிறப்ப உன் மூக்கு ஒழுகிக்கிட்டே இருக்கும்டா. நீ வளர்ந்துட்ட என்று கேலி செய்தது எனக்கு வெட்கமாக இருந்தது. (டே மணிப்பாண்டி இப்பவும் ஒழுகதான் செய்யுது)

நான்காம் வகுப்பு ஆசிரியர் வீரமணி நல்ல கதை கூறி பாடம் நடத்துவார் அவரிடம் உள்ள ஈர்ப்பு என்ன தெரியுமா ?

அவரது வழுக்கை தலை தான். தலையை பார்த்து வயிறு வலிக்க சிரிப்போம். அது மட்டுமா அவரே அவர் தலையை வைத்து காமெடி பண்ணுவார். என் ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் பிரேமா. வராத மாணவருக்கு வருகை பதிவேட்டில் வரவே இல்லை என்று எழுத மாட்டார். விடுப்பு என்றே எழுதுவார். அந்தளவிற்கு மாணவர்களிடம் அன்பும், பாசமும் உள்ளவர். 1 முதல் 5 வரை பட்டு பூச்சி படிப்பை முடித்து 6 வகுப்புக்கு செங்குந்தர் பள்ளிக்கு வந்தேன். ஆறாம் வகுப்பு நுழைவுத் தேர்வில் ஆ பிரிவில் தேர்ச்சி பெற்றேன். ஆறாம் வகுப்பு ஆசிரியர் மலர்விழி இவரின் வகுப்புகளில் 350 மதிப்பெண் எடுக்கும் மாணவன் நான். மலர்விழி டீச்சரின் மகன் உதயக்குமார். சிறப்பு வகுப்பு சனிக்கிழமைகளில் விரைவில் முடிந்தால் உதயக்குமாரை பார்க்க டீச்சர் வீட்டுக்கு போவேன். ஜாலியாக இருக்கும். 7,8 ஆம் வகுப்பு ஆசிரியர் சசிகலா, தமிழாசிரியர், மணிமேகலை பாடல், கவிதை, பாடம் இவற்றை கதையாக மாற்றி நடத்துவார். இப்போது ஒன்பதாம் வகுப்பில் சித்தன் ஐயா ஆங்கிலம், சமூகஅறிவியல், பாடங்களை நடத்துகிறார். ஆசிரியர் விஜயகுமாரி அறிவியல் ஆசிரியர், செல்வி கணிதம், தமிழம்மா சாந்தி தமிழ் போன்ற பாடங்களை நடத்துகிறார்கள். எல்லாத்தையும் விட பிடித்த ஆசிரியர் நமது பாலசுப்பிரமணியம் சார். அவர் கைப்பந்து, கால்பந்து, மட்டை பந்து, ஆகியவற்றை நன்றாக கற்றுத் தருகிறார்.

## தன்னம்பிக்கை

என் தன்னம்பிக்கை கடலை விட பெரிதானது. எதை வேண்டுமானாலும் இழப்பேன். என் தன்னம்பிக்கையை மட்டும் என்றும் இழந்து விடமாட்டேன். தென்னை மரத்தினை நட்டு வைத்தவன் இளநீருக்காக காத்திருப்பான். நாமும் நம் மீது நம்பிக்கை வைத்தால் உலகத்தை கூட வெல்லலாம். நீ யாரென்று உன் வீட்டிற்கு மட்டும் தான் தெரியும். ஆனால் உன் மனதில் தன்னம்பிக்கை (திறமை) இருந்தால் உன்னை உலகத்திற்கே தெரியும்.

M.வரலெட்சுமி IX

## மழை

நீ இனிக்கின்ற மணி ஓசையோ
கைதட்டும் மழலைகளின்
எண்ணற்ற ஆசையோ
நீ வந்தாயோ!

பறவைகள் தன் கூடுகளில் சேர
வண்ண மயில்கள் நடனமாட
நான் கைகளை நனைக்க
நீ வந்தாயோ!

A.சர்மிளா IX

## கவிதை

1. கடலில் விழுந்த தங்க காசு போல
   வானத்தில் ஒரு நிலவு அதன் அருகே
   வைரக்காசுகள் விழுந்தது போல
   நட்சத்திரங்கள்...

2. சேலை இருக்கும் இடம்தான் நூலுக்கு நிரந்தரம்
   கவிதை இருக்கும் இடம்தான் எனக்கு நிரந்தரம்

3. கனவுகள் உண்மை பேசாது, ஆனால்
   கனவில் வரும் லட்சியங்கள் பேசும்

கிரிஜா IX

### தோழிக்கு கடிதம்

நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை. நான் நடந்ததை நினைத்து வருந்துவதில்லை. நீ வருவதை நினைத்து மகிழ்கிறேன். என்னை விட்டு நீ பிரியவில்லை எனக்காக வா

கோபத்தை மாற்றி கொண்டு
என்னை பார்க்க வா

V.ஜென்ஸிராணி IX

## FCMRP 4வது குழந்தைகள் மாநில மாநாடு

எங்கள் குழு இயக்குநர். மன்சூர்அலி தலைமையில் S.முத்துகணேஷ் (IX). P.விக்னேஸ்வரன் (VIII). D.விக்னேஸ்வரன் (VIII). A.ஜென்ஸிராணி (IX) ஐவராக பங்கேற்றோம். MSCF கடந்த நான்கு ஆண்டுகளாக FCMRP கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளது. நான் FCMRPயில் ஓராண்டு காலம் மதுரை மாவட்ட உறுப்பினராகவும், ஓராண்டு காலம் தென் மண்டல பிரதிநிதியாகவும் இருந்து தமிழகத்தில் குற்றாலம், கன்னியாகுமரி, நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி என பல நிகழ்வுகளில் பங்கு கொண்டுள்ளேன். இம்முறை மாநில மாநாட்டில் நடைபெற்ற தேர்தலில் பொருளாளர் பதவிக்கு தென்மண்டலம் வாய்ப்பு தந்தது. கடும் போட்டியில் 35 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தேன். தென்மண்டல உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவால் துணை செயலாளர் பொறுப்புக்கு மீண்டும் தேர்தலில் நின்று 25 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றேன். இது மதுரை சீடுக்கும் எனக்கும் பெருமையாக இருந்தது. புதுச்சேரி மாநிலம் தமிழகம் அருகிலுள்ள யூனியன் பிரதேச மாநிலம்.மதுரைக்கும் புதுச்சேரிக்கும் இடையே உள்ள பயண நேரம் 10 மணி நேரம் ஆகும். மாநாடு காலாபட்டு. கோல்பிங்பள்ளியில் இரு நாட்கள் நடைபெற்றது. முதல் நாளில் கலை நிகழ்வுகள், பொதுக்குழு கூட்டம், தேர்தல் போன்றன நடைபெற்றன.




இரண்டாம் நாளில் பொதுக்குழு கூட்டம், மனித சங்கிலி, பதவியேற்பு போன்றன நடைபெற்றன. மனித சங்கிலியில் குழந்தை உரிமைகள் மற்றும் நலன் சார்ந்த கோரிக்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன

"ஆளுகையில் நாம் இருப்போம்
பங்கேற்பை வென்றிடுவோம்"


என்ற கருத்தாக்கத்தில் நடைபெற்ற மாநாடு பங்கேற்ற குழந்தைகள் அனைவருக்கும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வையும்.எதிர்கால பணிகள் நோக்கி ஆற்ற வேண்டிய கடமைகளை குறித்தும் உணர்த்தியது.

S.முத்துகணேஷ்
துணை செயலாளர்
FCMRP
தமிழகம் மற்றும் புதுச்சேரி

# கைவண்ணம் மூன்று



M.திவ்யபாரதி
XI




S.முத்துகணேஷ் IX



M.சத்தியமூர்த்தி X



R.வினோதினி
VIII

## பால் பருகுவோம்



- ஒரு வயசுக்குட்பட்ட குட்டீஸ்களுக்கு பாலை மட்டுமே முழு நேர உணவாகக் கொடுக்கலாம். அந்த அளவு சத்து மிகுந்தது பால்.
- அதற்கு மேற்பட்ட வயதில் உள்ளவர்களுக்கு பால் ஒரு முக்கியமான இணை உணவு.
- பாலில் ப்ரோட்டீன், கால்சியம், ரிபோஃப்ளேவின், வைட்டமின் டி உள்ளிட்ட வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் இருக்கின்றன.
- குழந்தைகள் ஒரு நாளைக்கு நான்கு தடவையாவது பால் அருந்துவது நல்லது. காலை எழுந்தவுடன் ஒரு முறை, பள்ளிக்கு செல்லும் முன் ஒரு தடவை, மாலை நேரம் மற்றும் இரவு படுக்கைக்குச் செல்லும் முன் என நான்கு முறை பால் அருந்துவது நல்லது.
- வெறும் பாலாக கொடுப்பதை விட அதில் வேறு எதையாவது சேர்த்துக் கொடுத்தால் சத்தும், அதிகரிக்கும். சுவையும் கூடும்.
- பாலைப் பாயாசமாக அருந்துவது மிக மிக மிக, நல்லது. இப்படி சாப்பிடுவதால் பாலின் லேக்டோஸ் உடலில் சரியாகச் சேர்ந்து விடும். அதிலும் பருப்பு பாயசமாக இருந்தால் பருப்பின் ப்ரோட்டீனும் உடலில் சேர்ந்து கொள்ளும்.



- பாயாசத்துக்கு அடுத்த இடம் மில்க்ஷேக்குக்கு. பழங்கள், சாக்லேட், நட்ஸ் என எதை வேண்டுமானாலும் சேர்த்து மில்க்ஷேக் செய்யலாம்.
- கடைகளில் கிடைக்கும் சத்து பான பவுடர்கள், ப்ரோட்டின் சப்ளிமென்ட்களையும் சேர்க்கலாம்
- அதே நேரம் பாலில் செயற்கை நிறங்களை சேர்ப்பது நல்லது அல்ல.
- பால் மட்டுமல்ல பாலில் இருந்து கிடைக்கும் தயிர், மோர் போன்றவற்றை சேர்த்துக் கொள்வதும் நல்லது தான்.
- புளித்து நுரைத்த தயிரால் உடலில் நல்ல பாக்டீரியா சேரும். செரிமானக் கோளாறுகள் இருக்காது.
- பாலில் அதிக நீர் சேர்ப்பது பாலின் சத்துகளை குறைத்து விடும்.
- பால் எளிதில் அசுத்தமாகி விடும். அதனால் கறந்த பாலை அப்படியே கொடுக்கக்கூடாது. மாட்டுக்கோ, பால் கறக்கும் மனிதர்களுக்கோ வியாதி இருந்தால் அது பாலை அருந்துபவர்களுக்கும் தொற்றிக் கொள்ளும். பால் கறக்கும் பாத்திரம் அசுத்தமாக இருந்தால் அதுவும் உடல் கோளாறுகளைத் தரும். எனவே பாலை நன்றாகக் காய்ச்சி ஆறவைத்து குளிர்வித்த பின்புதான் பயன்படுத்த வேண்டும்.
- பாலில் இல்லாத முக்கிய சத்துக்கள் இரண்டு – இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் சி அதனால் தினசரி உணவில் பாலோடு பழங்களும், பருப்பு வகைகளும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# ஆபியம்

ஓய்வு நேரம் கிடைத்து நான்கு பேர் ஒன்றாக சேரும்போது என்ன விளையாடலாம் என சட்டென்று முடிவெடுத்து விளையாடுவது உண்டு. அப்படிப்பட்ட விளையாட்டுகளில் ஒன்று தான் 'ஆபியம்'.

3 அல்லது 5 சிறுவர்கள் ஒன்றாக கூடி 'சட்டி.... பானை... லொடக்' எனக் கூறி இரு கைகளையும் ஒன்றாக சேர்த்து உள்ளங்கையின் மீது உள்ளங்கையையோ அல்லது புறங்கையையோ வைப்பர்.

இருவர் ஒன்று போலவும், மூன்றாவது நபர் வேறாகவும் அமைந்தால் மூன்றாம் நபர் தனிமைபடுத்தப்படுவார். இப்படி மூன்று மூன்று பேராக சேர்ந்து ஒவ்வொரு ஒவ்வொருவராக தனிமைப் படுத்தப்பட்டு கடைசியாகத் தனிமைப்படுத்தபடும் நபர் குனிந்து நிற்க வேண்டும். மற்றவர்கள் வரிசையாக நின்று கொண்டு ஒவ்வொருவராக வந்து குனிந்து நிற்பவரின் முதுகின் மீது இரு கைகளையும் வைத்து துள்ளி குதித்துத் தாண்ட வேண்டும்.

முதல் முறை தாண்டும் போது 'ஆபியம்' என்றும், இரண்டாம் முறை தாண்டும் போது 'மணியாபியம்' என்றும், மூன்றாம் முறை 'கிருஷ்ணாபியம்' என்றும், நான்காம் முறை 'நாகனார் மண்ணைத் தொடு' எனவும் சொல்லித் தாண்டி, தரையை தொடுவர். இறுதிச் சுற்றில் 'ராஜா பின்னால உதை கொடு' என்று கூறி குனிந்து நிற்பவரின் பின்புறம் காலால் ஒரு உதை கொடுத்தபடி தாண்ட வேண்டும்.

இவ்வாறு தாண்டும் போது தாண்டுபவரின் கால்கள் நான்கு சுற்று வரை குனிந்து நிற்பவரின் மீது படக்கூடாது என்பது ஆட்ட விதி. அவ்வாறு பட்டால் தாண்டுபவன் குனிந்து நிற்க வேண்டும்.

இந்த விளையாட்டு சிறுவர்களுக்கு மன மகிழ்ச்சியைத் தருவதோடு நல்ல உடற்பயிற்சியாகவும் அமைகிறது.

——— x ———







# குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | | |
| | | ■ | | ■ | 5 | | |
| 6 | | 7 | | 8 | | ■ | 9 |
| 10 | | ■ | 11 | 12 | 13 | | |
| | 14 | | | | | 15 | |
| | | 16 | | | 17 | | |
| 18 | | | | 19 | | | ■ |
| | ■ | | ■ | | 20 | | |

**இடமிருந்து வலம்**

1. சேரமன்னன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் இயற்றிய காப்பியம். (8)
5. இவரைத் திருமணம் செய்வதற்காகத் தான் முருகப் பெருமான் வேடன் வேடத்தில் வந்தார். (3)
6. திரைகடல் ஓடியும் திரவியம் — (2)
7. — கெட்டப் பிறகு சூரிய நமஸ்காரம் என்பர். (2)
8. — வித்தையில் சிறந்தவன் அர்ச்சுனன். (2)
10. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன். (2)
13. உலக்கையின் ஜோடி. (3)
14. கோயம்புத்தூர் இவ்வாறு சுருக்கமாக அழைக்கப்படுகிறது. (2)
15. நமது தேசிய மரம் — மரம். (2)
17. நெருப்பை இப்படியும் சொல்லுவார்கள். (3)
18. காந்தியடிகளின் சுயசரிதம். (7)
20. — மறப்பது நன்றன்று. (3)

**மேலிருந்து கீழ்**

1. — துளி பெரு வெள்ளம். (2)
2. திருப்பதி வெங்கடாஜலபதி கோவில் பிரசாதம். (3)
3. 'கற்பகதரு' என அழைக்கப்படும் மரம். (2)
4. நாட்டில் தவறுகள் நடைபெறா வண்ணம் கண்காணிப்பது — துறையின் கடமையாகும். (3)
9. துன்பத்தை இப்படியும் சொல்லலாம். (4)
10. திருக்குறள் 1330 —களைக் கொண்டது. (3)
11. இயேசுவை காட்டிக் கொடுத்தவன். (3)
12. பெண்ணுக்கு மற்றும் ஒரு பெயர். (3)
13. சிலை வடிக்கும் சிற்பியின் கையில் இருப்பது. (2)
14. அரசனை இப்படியும் சொல்லலாம். (2)
16. பரி எனப்படும் விலங்கு. (3)
18. — எனப்படும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்தவர் இராஜாராம் மோகன்ராய். (2)
19. பூத்துக் குலுங்கும் மரம் செடி கொடிகளைக் கொண்ட மிகப் பெரிய தோட்டம். (2)

**விடைகள்**

இடமிருந்து வலம்

1.சிலப்பதிகாரம்
5.வள்ளி
6.தேடு
7.கண்
8.வில்
10.பாரி
13.உரல்
14.கோவை
15.ஆல
17.அனல்
18.சத்தியசோதனை
20.நன்றி

மேலிருந்து கீழ்

1.சிறு
2.லட்டு
3.பனை
4.காவல்
9.அல்லல்
10.பாடல்
11.யூதாஸ்
12.மங்கை
13.உளி
14.கோன்
16.குதிரை
18.சதி
19.சோலை

# துணுக்குகள்



- தமிழ் இலக்கியத்தில் முதலில் தாலாட்டு பாடியவர் பெரியாழ்வார்
- சிரிப்பை பற்றிச் சொல்லித் தரும் பள்ளி மான்செஸ்டரில் உள்ளது
- யூதர்களின் புனித நூல் டோரா
- இரவில் மிகவும் பிரகாசமாக ஒளிரும் நட்சத்திரம் சிரியஸ்
- முதன் முதலில் கிளி ஜோதிடம் தோன்றிய நாடு மியான்மர்
- நேபாள மன்னர்களின் குலதெய்வம் ராமேஸ்வரம் ராமநாதசாமி கோயில்
- உலோகங்களில் உயர்ந்தது புளுட்டோனியம்
- சூரியனின் மகள் பருத்தி



- வேப்ப மரத்தின் மாற்றுப் பெயர்கள் அரிட்டம், துத்தை, பரிமதரம், பின்மந்தம், வாதாரி, அருட்டம், அருணாவதி, கடிப்பாறை
- ஆர்டிக் கடல் வருடத்தில் 8 மாதங்கள் உறைந்திருக்கும்.
- முதன் முதலில் கடல் பயணத்தின் மூலம் உலகை சுற்றி வந்தவர் மெகல்லன்
- பச்சையம் இல்லாத தாவரம் காளான்
- காந்தியடிகள் தனது சுயசரிதையான சத்திய சோதனையை குஜராத்தி மொழியில் எழுதினார். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் மஹாதேவ் தேசாய்.
- சிலந்திகளின் வலை அமிலத்தன்மை உடையதால் பாசி,பாக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளால் பாதிப்படையாது.



- கடலில் சுமார் 25,000க்கும் மேற்பட்ட மீன் இனங்கள் உள்ளன.
- தாமரை மலரிலிருந்து 200 வகையான மருந்துகள் தயாரிக்க முடியும்
- ஆக்டோபஸ் போலவே பல கால்களுடன் நீரில் வாழும் பிராணி ஸ்குவிட்
- ஹம்மிங் பறவையால் ஒரு மணி நேரம் அசையாமல் இருக்க முடியும்
- எலிகளின் இதய துடிப்பு நிமிடத்திற்கு 700 முறையாகும்.
- ஆஸ்திரேலியாவின் கங்காருவைப் போல கோலா என்ற விலங்கு தன் குட்டிகளை சுமந்தபடி மரத்துக்கு மரம் தாவுமாம்



- ஆக்டோபஸின் ரத்தம் நீல நிறமாக இருக்கும்.
- பிறந்த ஐந்தே நாட்களில் குதிரைக் குட்டி ஓடத் துவங்குகிறது.
- பறந்தாலும், நின்றாலும், அமர்ந்தாலும் இறக்கையை மடக்கமுடியாத பூச்சி தட்டாம்பூச்சி
- பறவைகளில் ஆந்தைக்கு மட்டுமே மனிதர்களைப் போல இரண்டு கண்களும் முகத்தின் முன்புறத்தில் இருக்கின்றன.
- நீரில் மீன்களும், நிலத்தில் குதிரைகளும் தூங்குவதே இல்லை.



- வாத்துகள் தூங்கிக் கொண்டே நீரில் நீந்தி வட்டமடிக்கும்.
- பறவைகளில் நீரை உறிஞ்சிக் குடிப்பது புறா மட்டுமே.
- பார்வை இல்லாத விலங்கு வௌவால்.
- இரவில் மலரும் பூக்களில் ஒன்று நிஷாகந்தி.
- மானுக்கு ஆண்டுதோறும் கொம்புகள் புதிதாக முளைக்கின்றன.
- சூரிய மீன் என்ற ஒருவகை மீன் கோடிக் கணக்கில் முட்டை இடும் .

# எங்கள் பேனாக்களின் சேதி ...

வரப்பிரசாதம்


இவ்வாண்டு வசந்த கோலம் முதன் முறையாக பங்கு கொண்டேன். பங்கு கொண்டவர்கள் அனைவரும் திறமையானவர்களாக மாற்றுவது இக்கோலத்தின் வெற்றி 10 நாட்கள் 10 விதமான தலைப்புகளில் நடத்தியது புதுமை. பள்ளிகளில் கிடைக்காத அற்புதமான கற்றல் அனுபவங்கள் கிடைத்தன. வசதி உள்ளவர்கள் பணம் கொடுத்து கோடை முகாம் செல்கிறார்கள். எங்களை போன்றவர்களுக்கு வசந்த கோலம் மறக்க முடியாத முகாம். அரிய வரப்பிரசாதம்.

K. கார்த்திக்
IX

பேச்சு ... அம்மா

மதுரையில் நடக்கும் பல விழாவில் ராஜ்குமார் என்ற அண்ணன் "பாரதி இருந்தால்" என்ற தலைப்பில் பேசியது அற்புதமாக இருந்தது. அந்த அண்ணன் தன், மன்னர், ஆட்சி மற்றும் ஆங்கிலேயர்கள் மதுரை கற்பித்தனர். பாரதியார் கதை மற்றும் இராமர் இராவணன் பல பண்புகளையும் பாடல்களையும், சித்திரங்களையும் மற்றும் தமிழ் கற்பித்தல் திறமைகளை வழிவகுத்தது சாத்தியமே அண்ணன் விளக்கினார். எங்களை மறக்க முடியாத இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பு படிக்கும் இந்த அண்ணன் வழியைதான் நம் அனைவரும் சாதனை செய்ய ஊக்கம் அளித்தார்.

சு. விஜயலட்சுமி



சிறப்பாகவே ...

எப்பொழுதும் மேலே பள்ளிகளுக்கு ஒரு விடுமுறை நாங்கள் வீட்டு வேலைகள் பார்க்க வேண்டும். எப்படா வேலை முடியும் சீக்கிரம் மதுரை திருவிழா போகலாம் என்று பார்ப்போம். கோடை விடுமுறையில் அதிக சந்தோஷமான காலம் என்றால் அது வசந்த கோலத்தில் 10 நாட்கள் தான் சிறந்தவை. சிலம்பம் கைவினை பொருள் பயிற்சி, பாடல், நடனம், நாடகம், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என் எல்லா நாட்களும் சிறப்பாகவே இருந்தன.

ஏ. திருமுருகேஷ்
IX


மதுரை சீர் கல் அழகு.

[illegible] பெண்களுக்கும் [illegible]. சில பெற்றோர்கள் பெண் குழந்தைகளை படிக்கப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் அவர் குழந்தைகளை வீட்டு வேலை, சமையல் வேலை செய்ய படிக்கப் பயன்படுத்துகின்றனர். வசந்த கோலம் 2010 பாடல் பாடியது, சிலம்பம் ஆட்டம் பார்ப்பது. சரியான முறையில் உணவு பொருட்களை தயாரித்து கற்பது அழகு சேர்க்கும். நடனம் செய்வது, பொம்மலாட்டம் பார்ப்பது, பாடல்கள், கைவினைப் பொருட்கள் மேலும் பல அழகான பண்புகளை செய்வது எல்லாம் எங்களை அசத்தியது.

மு. தங்கச் செல்வி
IX

# பாராட்டுக்கள்

## M.முத்துபாண்டி



S/o. K.M. மீனாட்சிசுந்தரம் - முத்துமீனாள், நடுத்தெரு
கரும்பாலை மதுரை-20.

கரும்பாலை மாநகராட்சி பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியர் K.முத்துராமலிங்கம் அவர்களின் பேரனான முத்துப்பாண்டி பத்தாம் வகுப்புத் தேர்வில் 2008ஆம் ஆண்டில் 500க்கு 474 மதிப்பெண் பெற்று சாதனை பெற்றிருந்தார். அவ்வாண்டு வரை கரும்பாலையின் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களில் அதிகபட்சமாக இருந்தது. 2010ஆம் ஆண்டில் இவரின் 12ம் வகுப்பு மதிப்பெண் 1200க்கு 1130 மதிப்பெண் பெற்றுள்ளார். இதுவரை யாரும் பெறாத மதிப்பெண் இதுவாகும். நேரு வித்யாசாலை மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வி முழுவதும் பயின்ற முத்துபாண்டி இன்னும்மோர் உயரம் தொட்டுள்ளார். சென்னை அண்ணா பல்கலைகழகம் பொறியியல் பட்ட படிப்பில் இணைந்துள்ளார். இது கரும்பாலையில் உள்ள அனைவருக்கும் பெருமை. முத்துப்பாண்டி இன்னும் சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம். வாழ்க! வளமைகள் பெறுக!!.

## K.சதீஸ்குமார்



S/o. கருப்பசாமி - லெட்சுமி, தெற்குத்தெரு கரும்பாலை மதுரை -20


செங்குந்தர் பள்ளி மாணவரான K.சதீஸ்குமார் செங்குந்தர் பள்ளியிலும் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இதுவரை யாரும் எடுத்திராத அளவில் முதன் முறையாக 500க்கு 479மதிப்பெண் பெற்று சாதனை புரிந்துள்ளார். தற்பேது தியாகராஜர் நன்முறை மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பில் Bio Maths பிரிவில் பயின்று வருகிறார். எளிமையும் அமைதியும் நிறைந்த K.சதீஸ்குமார் இன்னும் சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம் வாழ்க! வளமைகள் பெறுக.!!

## S.முத்துகணேஷ்



S/o. K.சங்கரபாண்டி - மாரீஸ்வரி, இந்திராநகர், மதுரை-20.

மதுரைசீடு குழந்தைகள் பேரவை பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் தமிழக மற்றும் புதுச்சேரி கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளார். கூட்டமைப்பின் புதுச்சேரி மாநில மாநாட்டில் பங்கேற்ற முத்துகணேஷ் மாநில நிர்வாக குழுவின் துணை செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். முத்துகணேஷ் தல்லாகுளம் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயில்கிறார் இவர் முன்பு மாவட்ட உறுப்பினர், தென்மண்டல பிரதிநிதி, செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகளை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய ஒன்று அவர் புகழ் வாழ்க! வளமைகள் பெறுக!!



## M.மாணிக்கராஜ்

S/o. R.மாடசாமி - ராஜேஸ்வரி, கிழக்குத்தெரு கரும்பாலை மதுரை

தியாகராஜர் பள்ளி மாணவரான மாணிக்கராஜ் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஆங்கில வழியில் 500க்கு 468 மதிப்பெண் பெற்று சாதனை புரிந்துள்ள அவர்க்கு எமது நெஞ்சார்ந்த வாழ்த்துகள் வாழ்க! வளமைகள் பெறுக.!!

## மதுரை சீடு நடவடிக்கைகள் - ஏப்ரல் 2010

1.4.2010: குழந்தைகள், இளைஞர்கள் பேரவை ஆண்டு கூட்டங்கள்

2.4.2010 இளைஞர்கள் அனைவரும் திரையரங்கிற்கு சென்று அங்காடித்தெரு திரைப்படம் கண்டு மகிழ்ந்தனர்

1.4.2010,
7.4.2010:
8.4.2010
} 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகள் நடைபெற்றன.

19.4.2010: 6.7.8.9 ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு ஆண்டுத்தேர்வுகள் ஆரம்பமாயின.

8.4.2010: இளைஞர்கள், O.மணிகண்டன் தலைமையில் தினமலர் நாளிதழ் நடத்திய கல்வி கண்காட்சியை சென்று பார்வையிட்டனர்.

9.4.2010 தொண்டர். சுல்தான் அலாவுதீன்- க்கு பாஸ்போர்ட் விண்ணபிக்க மதுரை சீடு உதவி செய்தது.

10.4.2010 காந்தி மியூசியத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியை தொண்டர். சரண்யா தலைமையில் +2 மாணவியர் கண்டு களித்தனர். மாலை அமெரிக்கன் கல்லூரி கல்லூரி நாள் விழாவில் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

11.4.2010: **TNPSC GROUP II** தேர்வை மதுரை சீடு லிருந்து 4 இளைஞர்கள் எழுதினர்.

15.4.2010: இளைஞர்கள், சுவிட்சர்லாந்து பள்ளி குழந்தைகளுடன் கலந்துரையாடினர். பாலாம்பிகை ஆங்கில வகுப்பு கல்லூரி முதல், இரண்டாமாண்டு மாணவிகளுக்காக நடைபெற்றது.

17.4.2010: சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த **VERENA, BETTINA** மற்றும் செசி கிராமப்புற நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் லலிதா மதுரை சீடு-ஐ பார்வையிட்டு குழந்தைகள் இளைஞர்களிடம் உரையாடினர்.

18.4.2010: 14வது புதுயுகம் இதழ்கள் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

19.4.2010: குழந்தைகள் மற்றும்இளைஞர்கள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று சித்திரைத் திருவிழா நிகழ்ச்சிகளை கண்டு மகிழ்ந்தனர். புதிய வெளிச்சங்கள் இளைஞர் இதழ்கள் விநியோகிக்கப்பட்டன.

20.4.2010: குழந்தைகளுக்கான விளையட்டு உபகரணங்கள் வாங்கப்பட்டன

21.4.2010: குழந்தைகள் உள்ளரங்க, வெளியரங்க விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

22.4.2010: தொண்டர்.முருகபாண்டி தலைமையில், குழந்தைகள், வெளியரங்க விளையாட்டுகளில் ஈடுபட்டனர். மாலை வேர்கள் அரங்க குழந்தைகள் சூழலியல் பூங்காவிற்கு சென்று வந்தனர்.

23.4.2010: குழந்தைகள் உள்ளரங்க, வெளியரங்க விளையாட்டுகளில் ஈடுபட்டனர். மாலை உலக புத்தக தினம் அனுசரிக்கப்பட்டது. நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி குழந்தைகளிடையே புத்தகங்கள் பற்றி உரையாடினார். சூழலியல் பூங்காவிற்கு குழந்தைகள் சென்று வந்தனர்.

24.4.2010: குழந்தைகள், இளைஞர்கள் தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற அரசு சித்திரைப் பொருட்காட்சியை பார்வையிட்டனர். பாலாம்பிகை அவர்களின் இளைஞர்களுக்கான ஆங்கில வகுப்பு நடைபெற்றது.

25.4.2010: மாப்பாளையம் மகளிர் சக்தி அமைப்பில் நடைபெற்ற **FCMRP** மாவட்டக் கூட்டத்தில் மண்டல பிரதிநிதி முத்துகணேஷ் மற்றும் மதுரை சீடு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் 4வது மாநில மாநாட்டுப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

27.4.2010: சித்திரை திருவிழா எதிர்சேர்வை நிகழ்வையொட்டி தல்லாகுளம் பகுதியில் மதுரை சீடு தண்ணீர் பந்தல் திறந்து சேவை செய்தது. திருவிழா கூட்டத்தில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தரும் மையமாக மதுரை சீடு இயங்கியது. புதிய வெளிச்சங்கள் இதழ் விநியோகிக்கப்பட்டது.

28.4.2010: சித்திரைத் திருவிழாவையொட்டி ஆவின் பால்பண்ணை பகுதியில் பொது மக்களுக்கு நீர் மோர் வழங்கி மதுரை சீடு சேவை செய்தது. புதிய வெளிச்சங்கள் இதழ்கள் விநியோகிப்பட்டன.

27.4.2010:
28.4.2010:
} திண்டுக்கல்லில் நடைபெற்ற **FCMRP**மண்டலக் கூட்டத்தில் மண்டல பிரதிநிதி முத்துகணேஷ் மாநில செயற்குழு உறுப்பினராகவும் நடைபெற உள்ள மாநில பொருளாளர் தேர்தலுக்கான வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டார். புதுயுகம் இதழ்கள் விநியோகிக்கப்பட்டன.

29.4.2010: இளைஞர்களுக்கான பாலாம்பிகை அவர்களின் ஆங்கில வகுப்பு நடைபெற்றது. வசந்த முகாம் ஏற்பாட்டு வேலைகளுக்கான தொண்டர் பயிற்சி

30.4.2010 வசந்த முகாம் ஏற்பாட்டு வேலைகளுக்கான தொண்டர் பயிற்சி

## மதுரை சீடு நடவடிக்கைகள் மே - 2010

1.5.2010 முதல் 10.5.2010 வரை

நான்காவது முறையாக குழந்தைகளுக்கான கோடைகால வசந்த முகாம் 10 நாட்கள் நடத்தப்பட்டது. முகாமின் இயக்குநராக முத்துக்குமார் அவர்களும் துணை இயக்குநராக இராதாகிருஷ்ணன் அவர்களும், ஒருங்கிணைப்புப் பணியை மன்சூர் அலி அவர்களும் மேற்கொண்டனர். கரும்பாலை சமுதாயக்கூடம் மற்றும் கனவுகள் அரங்கத்தில் தினசரி காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்ற இம்முகாமில் கரும்பாலை, S.M.நகர், P.T.காலனி, இந்திராநகர் மற்றும் கமலாநகர் பகுதிகளைச்சேர்ந்த குழந்தைகள் பங்கேற்று பயனடைந்தனர். 12 இளைஞர்கள் தொண்டர் பணியாற்றினர்.

முகாமில் தினசரி காலை சர்பத், லெமன் ஜீஸ், பானகரம், தேநீர், பேன்றவையும் மாலை தேநீர், பிஸ்கட் கடலைமிட்டாய், சீடை, தட்டை, எள்ளுமிட்டாய், பட்டாணி, கடலை, முறுக்கு போன்றவையும் வழங்கப்பட்டன. முகாம் நிறைவு நாளன்று பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படடன.

முகாமில் அதிக மதிப்பெண்கள் பெறற குழுவிற்கும், சிறப்பிடம் பெற்ற குழுவிற்கும், தொண்டர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் திரு.பாலுச்சாமி அவர்களும், மாமன்ற உறுப்பினர். கருப்பையா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வசந்த முகாம் - 2010

| நாள் | கருப்பொருள் | நிகழ்ந்தவை |
|---|---|---|
| 1.5.2010 | துவக்க நாள் | துவக்க விழா<br>குழுக்கள் பிரித்தல்<br>பாடல் பயிற்சி<br>விளையாட்டுகள்<br>குப்பையிலிருந்து கலைப்பொருட்கள் - பயிற்சி<br>கலைநிகழ்ச்சி - மௌன நாடகங்கள் |
| 2.5.2010 | போதை<br>விழிப்புணர்வு நாள் | பாடல் பயிற்சி<br>சாராயம், உடல்பாகங்களை எரிக்கும்<br>என்பதற்கான செயல் முறை விளக்கம்<br>புகை, மதுவுக்கு எதிரான அடையாளங்களை<br>உருவாக்குதல்<br>விளையாட்டுகள்<br>அடுப்பில்லா சமையல், அவல் லெமன்சாதம்,<br>சாக்லேட் தயாரிக்கும் பயிற்சி<br>போதை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் |
| 3.5.2010 | சுற்றுச்சூழல்<br>விழிப்புணர்வு நாள் | பாடல் பயிற்சி<br>தூய்மைப்பணி - சமுதாயக்கூடம்,<br>கரும்பாலை வடக்கு தெரு<br>மரம் நடுவிழா<br>விளையாட்டுகள்<br>மாய ஓவியம், விரல் ரேகை, ஓவியம் - பயிற்சி<br>சுற்றுச் சூழல் கலைநிகழ்ச்சிகள்<br>தொண்டர்களின் விழிப்புணர்வு நாடகம் |
| 4.5.2010 | ஊடக<br>விழிப்புணர்வு நாள் | பாடல் பயிற்சி<br>ஊடகங்கள் ஒரு அறிமுகம்<br>விளையாட்டுகள்<br>பசங்க திரைப்படம் திரையிடல்<br>மனித வண்ணத்துப்பூச்சிகள் உடையலங்கார<br>பயிற்சி |

| நாள் | கருப்பொருள் | நிகழ்ந்தவை |
|---|---|---|
| 5.5.2010 | சுகாதார விழிப்புணர்வு நாள் | பாடல் பயிற்சி<br>வேடிக்கையான விளையாட்டுப் போட்டிகள்<br>கை கழுவும் விழிப்புணர்வு நிகழ்ச்சி<br>உடல் சுகாதாரம் பேணுதல் |
| 6.5.2010 | மனிதநேய நாள் | பாடல் பயிற்சி<br>குழு நாடக பயிற்சி<br>கொலாஜ் ஓவியப் பயிற்சி<br>விளையாட்டுகள்<br>மனிதநேயம் -கலைநிகழ்ச்சிகள் |
| 7..2010 | அகிம்சை நாள் | பாடல் பயிற்சி<br>விளையாட்டுகள்<br>முக ஓவியம்<br>உடல் ஓவியம்<br>மலர்கொத்து செய்யும் பயிற்சி<br>அகிம்சை - கலைநிகழ்வுகள் |
| 8.5.2010 | கல்வி விழிப்புணர்வு நாள் | பாடல் பயிற்சி<br>விளையாட்டுகள்<br>கல்வி விழிப்புணர்வு வாசக அட்டைகள் தயாரிப்பு<br>கல்வி விழிப்புணர்வு பேரணி<br>விற்பனை நாள் |
| 9.5.2010 | சுற்றுலாநாள் | தென்பரங்குன்றம் பார்வையிடல்<br>குகைக்கோவில் வரலாறு அறிதல்<br>பூங்காவில் விளையாட்டுகள் |
| 10.5.2010 | நிறைவு நாள் - குழந்தை உரிமைகள் நாள் | குழந்தைகள் உரிமை - கருத்தரங்கு<br>வினாடி வினா<br>பாடல் பயிற்சி<br>குழுக்களின் கண்காட்சி<br>நிறைவு விழா |

11.5.2010 முதல் 20.5.2010 வரை

4வது ஆங்கில மொழிப்பயிற்சி முகாம் ஆனையூர் CM மையத்தில 11.5.2010 முதல் 20.5.2010 வரை 10 நாட்கள் நடைபெற்றது. காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணி வரை இப்பயிற்சி முகாமினை மதுரைசீடு ஏற்பாடு செய்திருந்தது. முகாமில் பங்கேற்பவர்களுக்கு போக்குவரத்து வசதி. தேனீர். மதிய உணவு போன்றவற்றை மதுரை சீடு ஏற்பாடு செய்திருந்தது முகாமில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன இளைஞர்களிடையே ஆங்கில மொழி மீதிருந்த பயத்தை போக்கி. தன்னம்பிக்கையை உருவாக்குவது இம்முகாமின் நோக்கமாக இருந்தது.

4வது ஆங்கில மொழிப்பயிற்சி முகாம்

| நாள் | நிகழ்ந்தவை |
|---|---|
| 11.5.2010 | துவக்க விழா<br>துவக்க உரை -கார்த்திக் பாரதி<br>முகாம் அறிமுகவுரை - வித்யா<br>பங்கேற்பாளர்கள் அறிமுகம்<br>குழு விவாதம்: பேசுவதற்கு. எழுதுவதற்கு அடிப்படைத் தேவைகள்<br>கவனித்தல் திறன் பயிற்சி<br>திரைப்பட நகைச்சுவை காட்சியை தமிழிலிருந்து ஆங்கில மொழி மாற்றுதல் பயிற்சி |

## 4வது ஆங்கில பயிற்சி முகாம்


| நாள் | நிகழ்ந்தவை |
|---|---|
| 12.5.2010 | சொல்வள பயிற்சிகள்<br>சூழல்களை கூறி ஆங்கில நாடகங்களை உருவாக்குதல். |
| 13.5.2010 | உச்சரிப்பு பயிற்சி<br>காகித ரூபாய் நோட்டுகளை வழங்கி செலவழிக்கும் முறையை ஆங்கில நாடகமாக வழங்குதல்<br>நேர்முகத்தேர்வு - ஆங்கில உரையாடல் |
| 14.5.2010 | MAP ஐ பயன்படுத்தல்<br>வழிகாட்டும் முறையுடைய NOUNS VERBS அறிமுகம்<br>சொல்வள விளையாட்டு<br>இளைஞர்களின் கலைநிகழ்ச்சி, நடனம்<br>தொடர்புடைய சொற்களை அறிதல்<br>விவசாயம் தொடர்புடைய சொற்களை அறிதல்<br>PREPOSTION உபயோகிக்கும் முறை |
| 15.5.2010 | Mr. ராஜசேகரின் இசை நிகழ்ச்சி<br>மொழிபெயர்ப்பு - அனுபவ பகிர்வு<br>ஆங்கில பாடல் எழுதும் பயிற்சி<br>INTERPERSONAL REALTIONSHIP, COMMUNICATION TRAINING<br>நம்பிக்கை விளையாட்டு<br>CHART ல் படம் வரைதல் |
| 16.5.2010 | ஆங்கிலப் பாடல்களை தமிழ்ப் பாடல்களாக மொழி மாற்றும் பயிற்சி<br>வாக்கியம் அமைக்கும் முறை மனன பயிற்சி<br>தூய தமிழ் பேச்சுப் பயிற்சி |
| 17.5.2010 | PROPER COMMUNICATION பயிற்சி<br>குழு விளையாட்டுகள்<br>வாக்கியம் அமைக்கும் முறை<br>விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல்<br>வங்கி நடைமுறைகள் பயிற்சி |
| 18.5.2010 | கதை கூறல் பயிற்சி<br>விளம்பரம் தயாரித்தல்<br>குணநலன், PERSONALITY கண்டறியும் முறை<br>படங்களைக் கொண்டு ஆங்கிலத்தில் விவாதித்தல் |
| 19.5.2010 | உடற்பயிற்சி குறித்த சொற்களை அறிந்து கொள்ளுதல்<br>பயிற்றுநர் கட்டளைகளுக்கு ஏற்ப நடித்தல்<br>கேள்விகள் உருவாக்கும் பயிற்சி<br>சமையலறையில் ஆங்கிலம் |
| 20.5.2010 | புதையல் வேட்டை<br>இசை நிகழ்ச்சி<br>ஆங்கிலப் பாடல்கள் அரங்கேற்றம்<br>நிறைவு விழா<br>சுவிஸ் ஆராய்ச்சி மாணவி ELLA மன்சூர் அலி, அன்பரசன் பங்கேற்பு |

13.5.2010 வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு பொம்மலாட்ட பயிற்சியை ராஜ்குமார் வழங்கினார்.

14.5.2010 +2 தேர்வு முடிவுகள் வெளியாயின. 100% தேர்ச்சி. மதுரை சீடு கல்வி மையத்தில். படித்து முதல் மதிப்பெண் பெற்றவர் முஸ்தபா கமால்கான் 937/1200. வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு பொம்மலாட்ட பயிற்சி - பயிற்றுநர் - ராஜ்குமார்.

| | |
|---|---|
| 14.5.2010 | கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு கேரம் பயிற்சி - பயிற்றுநர் - ராஜா |
| 15.5.2010 | எவிடன்ஸ் நடத்திய வன் கொடுமையால் பாதிக்கப்பட்டோரின் நூறு குரல்கள் என்ற தலைப்பில் சேம்பர் ஆப் காமர்ஸ் அரங்கில் நடைபெற்ற மக்கள் மாநட்டில் இளைஞர்கள் பங்கேற்றனர். |
| 17.5.2010 | வாண்டுகளுக்கான பயிற்சிபட்டறை -களிமண் பொம்மைகள் செய்தல் -பயிற்றுநர் - நாகராஜன் |
| 18.5.2010 | வேர்களுக்கான பயிற்சிப்பட்டறை -களிமண் பொம்மைகள் செய்தல்- பயிற்றுநர் - நாகராஜன் |
| 19.5.2010 | கனவுகளுக்கான பயிற்சிப்பட்டறை- களிமண் பொம்மைகள் செய்தல்- பயிற்றுநர் - நாகராஜன் |
| 20.5.2010 | +2 மாணவி மகேஸ்வரிக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகளுக்கான கட்டணம் வழங்கப்பட்டது. |
| 21.5.2010 | காரைக்கால் துறைமுக **MARG** நிறுவனம் புதுச்சேரி காரைக்கால் பகுதியில் நடத்திய குழந்தைகள் முகாமில் இளைஞர்கள் முருகபாண்டி, மோகன் கருத்தாளர்களாக பங்கு கொண்டனர். |
| 25.5.2010 | முற்றம் இலக்கிய மன்ற நிகழ்வு நடைபெற்றது. பேச்சாளர் தொலைக்காட்சி புகழ் ராஜ்குமார் கலந்து கொண்டு - பாரதி உயிரோடு இருந்தால் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார் |
| 26.5.2010 | **ENGLISH WORK SHOP** சம்பந்தமாக மதிப்பீட்டுக் கூட்டம் நடைபெற்றது.<br>10ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியாயின. 100% தேர்ச்சி 500க்கு 468 எடுத்து மாணிக்கராஜ் முதலிடம் பெற்றார். |
| 27.5.2010 | திருவண்ணாமலை, அண்ணாமலையார் ஆலயம் ரமணர் ஆசிரமம் - இளைஞர் சுற்றுலா |
| 28.5.2010 | சாத்தனூர் அணை - இளைஞர் சுற்றுலா |
| 29.5.2010 | தந்தையர் கூட்டம் பொறுப்பு - அன்பரசன் |
| 30.5.2010 | தாய்மார் கூட்டம் பொறுப்பு - அமுதா<br>ஆஷா தொண்டர் **Dr.** மெல்லி, குழந்தைகள், இளைஞர்களை சந்தித்து உரையாடினார்.<br>தமிழறிஞர் **Dr.** அண்ணாமலை மதுரை சீடு அலுவகங்களை பார்வையிட்டார். |
| 31.5.2010 | கரும்பாலையிலேயே அதிக மதிப்பெண் பெற்ற சதீஸ்குமாருக்கு பாராட்டு விழா காந்திமியூசியத்தில் நடைபெற்றது ஆசிரியை மாரியம்மாள் கலந்து கொண்டு சதீஸ்குமார், ராம்கி, மாணிக்கராஜ் ஆகியோருக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கினார்.<br>தலைமைத்துவ பண்புகள் என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. வழிநடத்தியவர் - முத்துகுமார். |



# MADURAI SEED

## வசந்த முகாம் 2010 - இல் கல்வி விழிப்புணர்வு நாளை முன்னிட்டு குழந்தைகளிடமிருந்து வெளிப்பட்ட முழக்கங்கள்

* கல்வி என்பது என்னுரிமை - அதை திறம்பட தருவது உன் கடமை
* கல்வி என்னும் கடலில் அறிவு என்னும் முத்தெடுப்போம்
* அறியாமை ஒழிய அறிவு ஒளியேற்ற சமச்சீர் கல்வி படைப்போம்
* வேண்டும் வேண்டும் கல்வி வேண்டும்
  வேண்டும் வேண்டும் கலைகளும் வேண்டும்
  வேண்டும் வேண்டும் விளையாட்டும் வேண்டும்
* கல்வி வளர்ச்சியே நாட்டின் உண்மையான வளர்ச்சி
* இன்று தலை குனிந்து படிப்பதெல்லாம் நாளை தலை நிமிர்ந்து வாழ்வதற்கே
* குழந்தை தொழிலாளர் முறை ஒழிய கல்வி எனும் ஆயுதம் எடுப்போம்
* கல்வி என்பது உயிர் மூச்சு
* சமச்சீர் கல்வி கற்போம் சமுதாய சீர்கேடுகளை ஒழிப்போம்
* கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே
* நற்கல்வி தருவது அரசின் கடமை அதை கோருவது எனது உரிமை
* எண்ணும், எழுத்தும் எமது இரு கண்கள்
* சமச்சீர் கல்வி கற்றிடு சமுதாயத்தை மாற்றிடு
* கல்வி கற்பது எமது பிறப்புரிமை
* நிகழ்கால கல்வி கசக்கலாம் - ஆனால் எதிர்கால வாழ்க்கை இனிக்கும்
* பெண் கல்வியை பெருமையுடன் போற்றுவோம்


இதழ் வெளியீட்டுக் குழு

V.திவ்யபாரதி (XII), A.சர்மிளா (IX) D.விக்னேஷ்வரன்(VIII), A.ராமகிருஷ்ணன் (VII)

C.அருண்குமார் (தொண்டர் பொறுப்பாளர்)

குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்

Dr.மெல்லியல் அண்ணாமலை, சென்னை ஆஷா குழுவினர்

திருமிகு.வே.மாரியம்மாள், திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி, திருமிகு. க.அன்பரசன்

மு.மன்சூர்அலி மதுரை சீடு நிர்வாகக் குழு



தொடர்புக்கு : புதுயுகம் சிற்றிதழ்

மதுரை சீடு

அர்ஜுன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.

பேசி : 9894805446, 94425 37670, 0452-2537670

மின்னஞ்சல் : maduraiseed1999@gmail.com

வலைதளம் : www.ashanet.org # seednarpanigal

www.madurai-seed.org


*மதுரை சீடு அறக்கட்டளை கல்வியுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.*